www.agaram.lk



# றோயல் கல்லூரி – கொழும்பு 07

**கிறிஸதவம்**

**மூன்றாம் தவணை - 2022**

**தரம் 11**

***01 மணித்தியாலம்***

பகுதி - I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. “கடவுள் நம்முடன் இருக்கிறார்” என்பதற்கான எபிரேயச் சொல்.
   - I. இம்மானுவேல்
   - II. மரநாத்தா
   - III. ரபோனி
   - IV. கிறிஸ்டோஸ்

2. வாய்மொழிப் பாரம்பரியத்தை பின்பற்றிய குழுவினர்.
   - I. சதுசேயர்
   - II. எசீனியர்
   - III. பரிசேயர்
   - IV. செலோத்தியர்

3. இயேசுவின் போதனைகளின் மையப்பொருளாய் அமைந்தது என்ன?
   - I. இறையரசு
   - II. அரசியல் சுதந்திரம்
   - III. யூத சட்டம்
   - IV. எருசலேம் ஆலயத்தை மீள அமைத்தல்.

4. கொரிந்திய சபைக்கு எழுதிய திருமுகத்தில் முக்கியமான அருட்கோடையாக பவுல் எதனைக் குறிப்பிட்டுள்ளார்?
   - I. இறைவாக்கு உரைத்தல்.
   - II. தர்மம் செய்தல்
   - III. அன்பு
   - IV. அறிவு

5. உரோமப் பேரரசினால் மக்கள் மீது சுமத்தப்படட மிகக் கூடிய சுமை யாது?
   - I. அடிமைத்தனம்
   - II. வரிச்சுமை
   - III. பலி செலுத்துதல்
   - IV. சமய வழிபாடு நடத்தல்

6. கடவுளின் பரிசுத்த தன்மையையும், மனிதனின் பாவத்தையும் இறைக்காட்சியின் மூலம் அறிந்து கொண்டு சமுதாயத்திற்குள் சென்ற இறைவாக்கினர் யார்?
   - I. எரேமியா
   - II. ஏசாயா
   - III. ஓசேயா
   - IV. ஆமோஸ்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

7. யூத மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு ………….. இயேசுவானவர் ஆவார் என்பதனை முன்வைத்தவர் யார்?
   - I. யோவான்
   - II. பேதுரு
   - III. திருமுழுக்கு யோவான்
   - IV. செக்கரியா

8. பாடசாலை மாணவனாக உமக்கு திருமுழுக்கு யோவான் அளிக்கும் சவால் என்ன?
   - I. மனந்திருந்துதல்.
   - II. மன்னித்தல்.
   - III. பொறுப்பாய் இருத்தல்.
   - IV. அன்பு செலுத்துதல்.

9. இயேசுவானவர் பிறந்ததும் வளர்ந்ததுமான நகரங்கள் முறையே
   - I. எருசலேம், நாசரேத்து
   - II. எருசலேம், கானான்
   - III. பெத்தலேகம் , கானான்
   - IV. பெத்தலேகம், நாசரேத்து

10. தலைமைக்குருக்கள் எச்சமயக் குழுவிலிருந்து நியமிக்கப்பட்டார்?
    - I. பரிசேயர்
    - II. மறைநூல் அறிஞர்
    - III. சதுசேயர்
    - IV. லேவியர்

11. எதிர்பார்க்கப்பட்ட மெசியாவின் விசேட குணம்
    - I. அவர் நாசரேத்தில் வளர்க்கப்படுவார்.
    - II. அவர் யூதரின் அரசராவார்.
    - III. அவர் சிலுவையில் மரிப்பார்.
    - IV. அவர் அமைதியின் அரசர் என அழைக்கப்படுவார்.

12. என் தீவினை முற்றிலும் நீங்கும்படி என்னைக் கழுவியருளும் என் பாவம் அற்றுப் போகும்படி என்னைத் தூய்மைப்படுத்தியருளும் என்ற செபத்தை செய்தவர்.
    - I. ஏசாயா இறைவாக்கினர்
    - II. ஆமோஸ் இறைவாக்கினர்
    - III. தாவீது அரசன்
    - IV. பவுல் அப்போஸ்த்தவன்

13. ஆழத்திற்கு தள்ளிக்கொண்டு போய் மீன்பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள் என்று இயேசுவானவர் கூறியது.
    - I. சீமோனிற்கு
    - II. யாக்கோபிற்கு
    - III. யோவானிற்கு
    - IV. அந்திரேயாவிற்கு

14. ஒருவர் தன்னை பற்றிய அளவுக்கதிகமான மதிப்பீட்டைக் கொண்டிருப்பதிலுள்ள இடரை எடுத்துக் காட்டும் உவமைக் கதை.
    - I. பரிசேயனும் வரி தண்டுபவரும்
    - II. செல்வந்தரும் வாசரும்
    - III. போருக்கு ஆயத்தமாகும் அரசன்
    - IV. அறிவற்ற செல்வன்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

15. இறைவாக்கினர் முன்னறிவித்த செய்திகளும் பின்னர் மரியாளுக்கு உரைக்கப்பட்ட வானதூதரின் செய்தியும் இயேசுவானவரின்
    I. பெரியவராய் இருத்தல் மேன்மை பற்றியனவாகும்.
    II. உடற்தோற்றம் பற்றியனவாகும்.
    III. ஏழ்மை பற்றியனவாகும்.
    IV. தராதரம் பற்றியனவாகும்.

16. தாக்கப்பட்டு பிலிப்பி சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த பவுல் சீலா என்போரின் செயல்களிலிருந்து நாம் கற்கும் பாடம்.
    I. அநீதியின் விளைவுகளுக்கு எதிராக எழுந்து நிற்றலாகும்.
    II. பிரச்சனைகளின் மத்தியிலும் கடவுளை துதித்து செபித்தலாகும்.
    III. சிறைக்காவலனுக்கு திருமுழுக்கு கொடுத்து போதித்தலாகும்.
    IV. சிறையிலிருக்கும் போது ஆர்ப்பாட்டம் செய்தலாகும்.

17. நன்றி கூறிய ஒருவரைப் பற்றி இயேசுவானவர் சிறப்பாக எடுத்துரைப்பதற்கு ஏதுவாயிருந்தது.
    I. சூம்பிய கையுள்ளவன் குணமாக்கப்பட்ட நிகழ்வு
    II. குணமாக்கப்படட பத்து தொழுநோயாளரின் சமாரியர் ஒருவர் மட்டும் மீண்டும் வந்து நன்றி கூறிய நிகழ்வு.
    III. குருடான பர்திமேயு குணப்படுத்தப்பட்ட நிகழ்வு
    IV. இரத்தப்போக்குள்ள பெண் குணப்படுத்தப்பட்ட நிகழ்வு.

18. இறையசரின் கொள்கைகளை வெளிப்படுத்துவதற்கு இயேசுவானவர் கூறிய உவமைகளாவன.
    I. பரிசேயனும் வரி தண்டுபவரும், காணாமற்போன ஆடு
    II. பெரிய விருந்து, காணாமற்போன ஆடு
    III. காணாமற்போன வெள்ளிக்காசு, கடுகுவிதை
    IV. பெரிய விருந்து, தாலந்துகள்.

19. ஆதித் திருச்சபையின் வழிபாடு வாழ்வில் முக்கியத்துவம் மிக்க விடயங்களுடன் தொடர்பில்லாத ஒரு காரணி.
    I. சபத் சட்ட்ங்களுக்கு ஏற்ப செயற்படுதல்.
    II. அப்பம் பிட்டலில் பங்குபெறுவது.
    III. செபத்தின் மூலம் ஒருவரின் வாழ்வை பலப்படுத்துதல்.
    IV. திருமறை கற்றலின் படி வாழ்வை சீரமைத்தல்.

20. மெசியாவின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் ஒளி
    I. அமைதியும் சமாதானமும்
    II. நோய்களிலிருந்து விடுதலை
    III. அரசியல் விடுதலை
    IV. எல்லாத் துறைகளிலும் முழுமையான வாழ்வு பெறல்.

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

21. இறைவனின் தூதுவர் என அழைக்கப்படுபவர்கள்
    I. பரிசேயர்
    II. இறைவாக்கினர்
    III. சனகரின் சங்க அங்கத்தினர்
    IV. லேவியர்

22. சட்டங்களுக்கு அப்பால் மனித நேயம் முக்கியமென்பதை பரிசேயருக்கு எடுத்துக்காட்டிய நிகழ்வு
    I. சபத் தினத்தில் கை சூம்பியவர் நலமடைதல்.
    II. லேவியை அழைத்தல்.
    III. குருடனாகிய பார்த்திமேயுவை குணப்படுத்துதல்
    IV. நூற்றுக்கதிபதியின் பணிவிடையாளர் குணப்படுதல்.

23. இயேசுவானவர் தமது திருப்பணி பற்றி முதலாவதாக வெளிப்படுத்திய நிகழ்வு
    I. மலைப்பொழிவு
    II. சோதனைகளுக்கு முகங்கொடுத்த போது
    III. மீன் பிடிப்போரை அழைத்த போது
    IV. நாசரேத்து தொழுகைக்கூட போதனையின் போது

24. ஆண்டவர் உண்மையாவாகவே எழுப்பப்பட்டார். இவ்வாறு கூறி புது நம்பிக்கையை ஏற்படுத்தியவர்/ ஏற்படுத்தியவர்கள்
    I. எம்மாவூர் சென்ற இரண்டு சீடர்கள்
    II. கல்லறைக்குச் சென்ற பெண்கள்
    III. மகதலா மரியா
    IV. ஏனைய சீடர்களிடம் சென்ற பேதுரு

agaram.lk

25. இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் பற்றிய உண்மைகளைப் புரிந்து சான்று பகர்ந்தவர்
    I. போர்வீரர்கள்
    II. அரிமத்தியாவின் யோசேப்பு
    III. எருசலேமின் பெண்கள்
    IV. சிரேனியூர் சீமோன்

26. மன்னித்தல் பற்றி இயேசுவானவரின் போதனையாவது
    I. எல்லையின்றி மன்னிக்கவும் ' மன்னிப்பைப் பெறுவதற்கு பிறரை மன்னிக்க வேண்டும்.
    II. சகோதரர்களை ஏழு முறை மன்னித்தல் போதுமானது.
    III. செபத்தின் மூலம் பாவமன்னிப்பு கெடுதல் அவசியமற்றது.
    IV. மன்னிக்கும் போதெல்லாம் நிபந்தனைகள் விதிக்க வேண்டும்.

27. நீ செய்த தவறுக்கு நான் மன்னிப்பு வழங்குகின்றேன் என்று கூறி இயேசுவானவரின் உன்னத பண்பை செயலில் காட்டிய அண்மைக்கால மனிதர் ஒருவர்
    I. இரண்டாம் ஜுவாம் பவுல் பாப்பாண்டவர்.
    II. மறைதிரு சந்திரா பர்ணாந்து
    III. மறைதிரு திஸ்ஸ பாலசூரிய
    IV. திரு நெல்சன் மண்டேலா

28. பிலிப்பியில் தலைமைத்துவம் வகித்த பெண்
    I. பிரிஸ்கில்லா
    II. தொற்கால்
    III. லீதியா
    IV. தீய ஆவியிலிருந்து விடுபட பெண்

29. அமைதியும் சமாதானமும் நிலைபெறச் செய்வதற்கு அவசியமானது.
    I. நிலையான அரசியல் சூழல்
    II. நீதியும் நியாயமும் நிலைபெறச் செய்தல்
    III. அமைதியற்ற செயல்களை எதிர்த்தல்
    IV. பிறரை நியாயத் தீர்ப்பிலிருந்து விலக்குதல்.

30. பழைய ஏற்பாட்டில் ''துன்புறும் பணியாளர்'' என்ற தலைப்பினால் குறிப்பிடப்படுபவர்.:.கள்
    I. இஸ்ரேயல் மக்கள்
    II. எகிப்திய மக்கள்
    III. துன்புறும் இறைவாக்கினர்
    IV. இயேசு கிறிஸ்து

31. கிறிஸ்தவ திருமுழுக்கின் மூலம் நீர் பெற்றுக்கொண்டுள்ள சிறப்பான அனுபவம்
    I. திருச்சபை அங்கத்துவம்
    II. முற்றான தூய்மை
    III. மனந்திரும்புதல்
    IV. தூய ஆவியானவரின் வழிநடத்தல்.

32. விதைப்பவரின் உவமையிலிருந்து கிறிஸ்தவராகிய நீங்கள் சிறப்பாக
    I. இறையரசுக்கான பலனைத் தர வேண்டும்.
    II. சுய ஆன்மீக வளர்ச்சியை நாட வேண்டும்
    III. இறைவார்த்தையைத் தியானிக்க வேண்டும்
    IV. இறை வார்த்தைகளை அலங்காரக் கற்களில் பொறிக்க வேண்டும்.

33. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவுக்கு இதயபூர்வமாக சான்று பகர்ந்தவர்
    I. மனந்திருந்திய கள்வன்
    II. சிரேன் உளர் சீமோன்
    III. உரோம நூற்றுவர் தலைவன்
    IV. அரிமத்தியாவின் யோசேப்பு

34. இன்று சமுதாயத்தில் நீதியை உதாசீனம் செய்து தமது மனசாட்சிக்கு விரோதமாகச் செயற்பட்டு மக்களின் மத்தியில் பிரபல்யம் அடைவதெற்கென செயற்படுவோர் ஒப்பிடப்படுவது.
    I. பேதுருவுடன்
    II. ஆளுநர் பிலாந்துவுடன்
    III. திருமுழுக்கு யோவானுடன்
    IV. மகதலா மரியாவுடன்

35. பன்மைச் சமூகத்தில் ஒற்றுமையுடன் சுகவாழ்வு வாழும் கிறிஸ்தவருக்கு அவசியமற்றது.
    I. பிற மத, பிற இன மக்களுடன் அவர்களின் விழாக்களில் பங்குபற்றல்.
    II. கலாச்சார விழாக்கள் போன்றவற்றில் கிறிஸ்தவ அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்ளுதல்.
    III. அனைத்து சமயங்களும் ஒன்றேயாகும் என ஏற்றுக் கொள்ளல்
    IV. சமுதாய நலன்புரி பணிகளில் யாவருடனும் சேர்ந்து செயற்படல்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

36. குழந்தை இயேசுவை தேவாலயத்திற்கு கொண்டு சென்ற நிகழ்வின் மூலம் நாம் கற்றுக்கொள்ளத்தக்க முக்கிய படிப்பினை
   I. பெற்றோருடன் மட்டுமே ஆலையம் செல்ல வேண்டும்.
   II. கடவுளுக்கு முதலிடம் கொடுப்பதற்கு ஆலயம் செல்வது முக்கியமாகும்.
   III. பாரம்பரியச் சடங்குகளுக்கூடாக கிறிஸ்தவ அடையாளத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
   IV. கிறிஸ்தவர், இலங்கையர் எனும் அடையாளத்துடன் வாழ வேண்டும்.

37. இயேசுவானவர் பெண்களையும் சிறுவர்களையும் ஏற்றுக்கொண்டதன் மூலம்
   I. அவர்களுக்கு நன்மதிப்பைப் பெற்றுக் கொடுத்தார்
   II. பிறருக்கு மேலாக அவர்களை உயர்த்தினார்.
   III. அவர்கள் எதிராராத அளவிற்கு பிரபல்யம் அடைந்தனர்.
   IV. பிறருக்கு தம்மைப்பற்றிக் கூறுவதற்கென அவர்களைப் பயன்படுத்தினார்.

38. கிறிஸ்தவக் குடும்பமொன்றின் அங்கத்தவர்கள் என்ற அடிப்படையில் சமுதாயம் தொடர்பான நமது கடமையாக இருக்க வேண்டியது.
   I. வேறு கிறிஸ்தவர்களைத் தேடிப்பார்த்து அவர்களுக்கு உதவி செய்தல்.
   II. கடவுளுக்கு மகிமை கொண்டு வருவதற்கென அனைத்தையும் பொறுமையுடன் மன்னித்துச் செயற்படல்.
   III. இறைவார்த்தையை சமுதாயத்தில் பரப்புவதற்காக ஆர்வத்துடன் செயற்படல்.
   IV. சமுதாயத்தில் குறைகளைக் கண்டித்து சரியாக வழிகாட்டுதல்.

39. இயேசுவின் தாய்,சகோதரன்,சகோதரி ஆவதற்கு நாம் செய்ய வேண்டியது.
   I. தினமும் ஆலயம் செல்லுதலாகும்.
   II. மரபுகளை பேணுதலாகும்.
   III. சமுதாயப் பணியில் மட்டும் ஈடுபடுதலாகும்.
   IV. இறைவனின் சித்தம் அறிந்து அதற்கமைய செயற்படுத்தலாகும்.

40. மனிதன் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை என்பதனூடாக இயேசுவானவர் முன்வைத்த செய்தி.
   I. உணவைப் போன்று ஆடை, அணிகளும் தேவை என்பதாகும்.
   II. கடவுள் உணவைத்த தருவார் என்பதாகும்.
   III. இறைவார்த்தையினாலும் நாம் நிறைவு பெற்றிருப்பது முக்கியமாகும்.
   IV. கல், அப்பமாக மாற்றப்படலாம்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி II

- விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01)

I. இயேசுவானவர் கெத்சமனே தோட்டத்திற்கு எப்போது சென்றார்?

எதற்காக சென்றார்?

II. நித்திரை கொண்ட சீடர்களிடத்து திரும்பவும் வந்த இயேசுவானவர் தொடுத்த வினா என்ன?

III. அவர்களுக்கு கொடுத்த அறிவுரை என்ன?

IV. தற்காலத்து சமூகத்தில் நாம் எதிர்நோக்கும் சவால்களுக்கு மத்தியில் வாழ்க்கையை வடிவமைத்துக் கொள்வதற்கு கெத்சமனே தோட்ட நிகழ்வும் இயேசுவின் செபமும் எவ்வாறு துணை புரிகின்றன என்பதனை ஐந்து விடயங்களினூடாக விளக்குக.

02)

I. இயேசுவானவர் தமது வாழ்விலும் பணியிலும் மன்னிப்பை வெளிப்படுத்திய இரண்டு சந்தர்ப்பங்களை சுருக்கமாக எழுதுக.

II. மன்னிப்பு வழங்க மறுத்த பணியாளரின் உவமைக்கதை மூலம் பின்வருவனவற்றை விபரிக்க.

அ) பணியாளரின் வேண்டுதல்.

ஆ) எசமானின் பிரதி நடத்தை

இ) தமக்கு கடன்பட்டிருந்த நபரிடத்து பணியாள் காட்டிய பிரதி நடத்தை

III. மேற்குறிப்பிட்ட உவமைக் கதையிலிருந்து மன்னித்தல் பற்றி முன்வைக்கப்படுகின்ற போதனைகள் ஐந்திணை நமது அன்றாட வாழ்க்கையில் சிறப்பாகச் செயற்படுத்துவதற்கு எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதனை விளக்குக.

03) ஓய்வு நாளும் மானிட மகனுக்கு கட்டுப்பட்டதே

I. மேற்குறித்த கூற்றை கூறுவதற்கு இயேசுவானவரைத் தூண்டிய பின்னணி யாது?

II. இயேசுவானவர் நியாயச் சட்ட்ங்களையும் பாரம்பரியங்களையும் விட மனிதர்கள் முக்கியமானவர்கள் என்பதனைக் காட்டுவதற்கெனப் பயன்படுத்திய 3 சந்தர்ப்பங்களை சுருக்கமாக முன்வைக்க.

III. இயேசுவானவரின் முன்மாதிரியைப் பின்பற்றி இந்திய சமுதாயத்தில் நீதி நியாயத்தையும் சமூக நலன்புரிச்ச செயல்களையும் செய்வதற்கு கிறிஸ்தவர்களாகிய நாம் மேற்கொள்ளக் கூடிய 5 வழிமுறைகளை விளக்குக.

04)

I. ஆதிக் கிறிஸ்தவ திருச்சபையின் காணத்தக்கதாய் இருந்த சிறப்பான விழுமியங்கள் இரண்டை எழுதுக.

II. ஆதிக் கிறிஸ்தவ திருச்சபை சவால்களுக்கு முகங்கொடுத்து நீதிக்கும் சமூக நலனோம்பலுக்காகவும் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் 3 எழுதுக.



agaram.lk

III. ஆதிக் கிறிஸ்தவ திருச்சபையின் விழுமியங்களை இன்றைய திருச்சபை எவ்வாறு முன்கொண்டு செல்லலாம் என்பதற்குப் பொருத்தமான 5 வழிமுறைகளைச் சுருக்கமாக விளக்குக.

05)

I. பவுலின் வாழ்க்கையில் ஏற்பட்ட மனந்திரும்புதல் மாற்றத்தை நன்கு புலப்படுத்தும் சான்றுகள் எவை?

II. பவுலின் வாழ்க்கைப் பின்னணியானது அவரின் இறை பணியில் எவ்வாறு உதவிற்று என்பதனை 3 உதாரணங்கள் மூலம் விளக்குக.

III. பவுலின் வாழ்க்கை, திருப்பணி என்பவற்றின் மூலம் இன்றைய கிறிஸ்தவர்களாகிய நாம் பின்பற்ற வேண்டிய பெறுமதியான பண்புகள் எவை என்பதனை விளக்குக.

06) உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கு, அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக.

I. இயேசுவானவர் இவ் வசனத்தைக் கூறிய சந்தர்ப்பத்தைச் சுருக்கமாக விளக்குக.

II. இன்று எங்கள் மனதைக் கவரும் உலகம் சார்ந்த விடயங்கள் 3 எழுதுக.

III. இவ்வாறான விடயங்களை வெற்றி கொள்ள கிறிஸ்தவர்களாகிய நாம் செயற்பட வேண்டிய விதத்தை விளக்கும் 5 வழிமுறைகளை முன்வைக்க.

07) பின்வருவனவற்றுள் இரு தலைப்புகளைத் தெரிவு செய்து, அவற்றிற்கு திருமறையின் உதாரணங்களுடன் சிறுகுறிப்பு எழுதுக.

I. இன்றைய திருச்சபைகளுக்கு ஆதித் திருச்சபையின் பெறுமதிகளின் முக்கியத்துவம்.

II. கிறிஸ்தவத் திருமுழுக்கு

III. சமாதானத்திற்கு அர்ப்பணிப்போம்

IV. எருசலேம் சங்கம்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk